## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| MCOP.No. 106 /2022 | Date : 25.07.2025 | PW 1 |
|---|---|---|
| Name: கோவிந்தராஜ் | த/பெ.மாதையன் | |

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இருந்து போனவர் என் மகன் என்றால் சரிதான். விபத்தின் போது என் மகனுக்கு திருமணமாகவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகன் இருசக்கர வாகனம் ஓட்டி சென்றார். அந்த இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் எனது மகனுக்கு சொந்தமானது அல்ல என்றால் சரிதான். விபத்து சமயத்தில் அந்த இருசக்கர வாகனம் காப்பீடு செய்யவில்லை என்றால் சரிதான். என் மகன் விபத்தின் போது தலையில் அடிப்பட்டு இறந்துபோனார் என்றால் சரிதான். என் மகன் விபத்து சமயத்தில் தலை கவசம் அணியவில்லை என்றால் சரிதான். எனது மகன் மாணவனாக இருப்பதால் தனிப்பட்ட வருமானம் ஏதுமில்லை என்றால் சரிதான். அப்போது எனது மகன் மாலை நேரத்தில் பகுதி நேர வேலைக்கு செல்வார். விபத்து சம்மந்தமாக யார் போலிசில் புகார் கொடுத்தார்கள் என்றால் விபத்தை பார்த்த நபர் புகார் அளித்தார். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். விபத்து நடந்த அன்று அதிகாலையில் நான்தான் சென்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். உண்மை சம்பவத்தை மறைத்து நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

ஒம்/-கோவிந்தராஜ்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-R. சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.

IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

MCOP 106/2022

Deposition of PW 2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 25.07.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சிவராஜ் (எ) சேட்டு | **Caste** | : | |
| **S/o.** | : | சின்னதம்பி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த மனுவில் 2ம் சாட்சி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்றால் சரிதான். விபத்தை நான் நேரிடையாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் விபத்து குறித்து தெரிந்துகொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் தகவல் தெரிவித்தேன். விபத்து குறித்து இறந்த நபரின் பெற்றோருக்கு தகவல் தெரிவித்தேன். அவருடைய தகப்பனார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். என்னை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார். மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதாலும் இறந்த நபர் எனக்கு தெரிந்தவர் என்பதாலும் அவர குடும்பத்திற்கு அதிக நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

சார்பு நீதிபதி,
மேட்டூர்.